


வாடகை வீட்டுக்காரர்களுக்கு என்று எப்போதும் சில பிரச்னை இருக்கும். வீட்டுக்காரன் உலக உத்தமனாக இருந்தாலும், ஏதாவது ஒரு சனி தசையில் உயிரை வாங்கவே செய்வான். திடீரென்று ஒரு மச்சானைக் கூப்பிட்டுவந்து மாடியில் குடிவைப்பான். அவன் ஒரு குடிகாரப் பாவியாக இருப்பான். அல்லது கக்கூஸ் ரிப்பேர் பண்ணுகிறேன் என்று கல்லையும் மண்ணையும் கொண்டுவந்து குவித்துவிட்டு, கார்ப்பரேஷன்காரர்கள் மாதிரி கண்டுகொள்ளாமல் மாதக்கணக்கில் கழுத்தறுப்பான். முன்னறிவிப்பு இல்லாமல் வாடகை ஏற்றுவான். குழாயில் தண்ணீர் வரும் வழியை கோலி குண்டு போட்டு அடைத்து வைப்பான்.

இதற்கெல்லாம் கல்யாண குணங்கள் என்று பெயர். நாம் செய்யக்கூடியது ஒன்றுமே இல்லை, சொந்தமாக ஒரு வீடு கட்டிக்கொண்டு போவதைத் தவிர. ஒரு பார்வையில், உலகம் முழுக்க என் வீடுதான் என்று ஒசாமா பின்லேடன் இண்டர்நேஷனல் அல்லது மல்டி நேஷனல் கம்பெனியாகத் தமது தீவிரவாத பிசினஸை விஸ்தரித்துக்கொண்டிருந்தது வியப்புக்குரிய விஷயமாகவே இருந்தாலும், ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவருக்குத் திருகுவலிகள் இருக்கவே செய்தன.

உதாரணமாக, 1991-ம் ஆண்டு பாகிஸ்தானில் அவருக்கு நேர்ந்த ஒரு நெருக்கடியை எடுத்துக் கொள்ளலாம்.

ஒசாமா தீர்த்துக்கட்டிய முதல் நபர் டாக்டர் அப்துல்லா அசம் என்றால், அவர் கொல்ல விரும்பிய இரண்டாவது நபர், பேனசிர் புட்டோ. ஒருமுறை அல்ல, இரண்டுமுறை இதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. பேனசிர் வீட்டிலிருந்து அலுவலகம் வரும் வழியில் குண்டு நிரப்பப்பட்ட காரை மோதச் செய்து வெடிக்க வைப்பது ஒருமுறை. மிக நேரடியாக ஓரடி அல்லது ஒன்றரை அடி இடைவெளியில் நின்று துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது இன்னொரு முறை.

இரண்டு முயற்சிகளும் தோல்வியடைந்தன. திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னாலேயே முறியடிக்கப்பட்டது. அப்போதெல்லாம் பாகிஸ்தான் காவல்துறை கொஞ்சம் உஷாராகவே இருந்தது.

பின்லேடனுக்கு பேனசிருடன் என்ன பகை? பாகிஸ்தானுடன் நல்லுறவு, ஆனால் பாகிஸ்தான் பிரதமருடன் பகை என்பது புரிந்துகொள்ளக்கூடியதாக இல்லையே? என்றால், விஷயம் இருக்கிறது.

ஆகஸ்ட் 2, 1990. இது ஒரு முக்கியமான தேதி. ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு நாடுகளும் தம் வாழ்நாளில் மறக்கவே முடியாத தேதி. அன்றுதான் குவைத் மீது ஈராக் படை எடுத்தது. ஈராக் என்றால் சதாம் உசேன். ஒரே நாள். ஒரே அடி. குவைத், ஈராக்கின் வசமாகிப் போனது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் குவைத்துக்கு உதவுகிறேன் பேர்வழி என்று புறப்பட்ட அமெரிக்கா, சவூதி அரேபியாவில் தன் படைகளைக் கொண்டுவந்து இறக்கியது.

யாருக்காவது அப்போது சவூதி அரேபியாவின் மன்னர் யார், அவர் பேரென்ன என்று கேட்டால் தெரியுமா? ஆனால் ஒசாமாவின் சொந்த ஊர் அதுதான் என்பதும், ஆப்கனிஸ்தான் வரை சென்று தன் பெயரையும் ஊர்ப்பெயரையும் நிரூபித்துவிட்டு வந்தவர் என்பதும் தெரியுமல்லவா?

ஒசாமா, சவூதி மன்னரிடம் வேண்டிய மட்டும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார். அமெரிக்கப் படைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். ஈராக்கைப் பார்த்து பயப்பட வேண்டாம். என்னிடம் ஆயிரக்கணக்கான வீரர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரும் ஆப்கனில் தம் திறமையை நிரூபித்தவர்கள். சதாம் உசேன் நம்மிடம் ஒருவேளை வாலாட்டினால் வாலை ஒட்ட நறுக்க நான் கேரண்டி என்று.

ஆனால் மன்னர் கேட்கவில்லை. அவருக்கு அப்போது ஒசாமாவின் மீது அவ்வளவாக நம்பிக்கை இல்லை போலிருக்கிறது. ஆகவே அமெரிக்கப் படைகளுக்கு அழைப்பிதழ் அனுப்பிவிட்டார். ஆக, சவூதி அரேபியாவுக்கு அமெரிக்கா நண்பன் ஆகிவிட்டது. ஏற்கெனவே அமெரிக்கா பாகிஸ்தானுக்கும் நண்பன் என்கிறபடியால், இப்போது சவூதி அரேபியாவும் பாகிஸ்தானும் நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

இரண்டு நண்பர்களுக்கும்தான் வேண்டும் என்கிறபடியால், அமெரிக்கா இரண்டு பேரிடமும் ஒரு கோரிக்கை வைத்தது. ஒசாமாவை ஆதரிக்காதீர்கள். அல் காயிதாவின் முகாம்களை எங்கு கண்டாலும் அழித்துவிடுங்கள். ஆப்கன் யுத்தத்தின் இறுதியில் ஏற்பட்ட இருதரப்புக் கசப்பின் விளைவு இது.

இப்போது புரிகிறதா, ஒசாமாவுக்கு ஏன் பேனசிரைப் பிடிக்காமல் போனது என்று?

முன்சொன்ன அந்த இரு கொலை முயற்சிகளுக்கு முன்னால் வேறொரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைக் கூட ஒசாமா செய்துபார்த்தார். அவர்பாட்டுக்குச் சமர்த்தாகத் தீவிரவாதம் வளர்த்துக்கொண்டிருந்திருக்கலாம். தண்டத்துக்கு அரசியல் முயற்சியெல்லாம் கூட செய்து பார்த்திருக்கிறார் என்பது பலருக்கு வியப்பளிக்கலாம். ஆனால் நடந்தது உண்மை. ஒசாமாவுக்கு ஒரு அமெரிக்கா என்றால், பேனசிர் புட்டோவுக்கு ஒரு நவாஸ் ஷெரீஃப். பஞ்சாபைச் சேர்ந்த கடைந்தெடுத்த தொழிற்சங்கவாதி. கையில் பலூனைத் தூக்கிக்கொண்டு ஓடி விளையாடவேண்டிய காலத்திலிருந்தே கொடி தூக்கி கோஷமிட்டுப் பழகியவர். அவருக்கும் பேனசிருக்குமான துவந்த யுத்தத்தை நம் ஊர் ஜெயலலிதா - கருணாநிதி யுத்தத்துடன் மிகச் சுலபமாக ஒப்பிட்டுவிடலாம். ஒரே வித்தியாசம், கருணாநிதி எப்போதும் டிஃபென்ஸ் தாக்குதல்தான் நடத்துவார். நவாஸ் ஷெரீஃப் எப்போதும் அஃபென்ஸிவ்தான்.

எப்படியாவது நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேனசிர் ஆட்சியைக் கவிழ்த்துவிட மாட்டோமா என்று நவாஸ் ஷெரீஃப் அப்போது மிக மும்முரமாகக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார். பாகிஸ்தானில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதெல்லாம் மிகவும் செலவு பிடிக்கும் காரியம். உண்மையிலேயே நம்பிக்கை இல்லாத எம்.பி.க்களைத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்யக்கூட, பலகோடி ரூபாய் செலவு செய்தாக வேண்டும். அது போதுமா என்றால், போதாது! நம்பிக்கை உள்ள ஆசாமிகள் சிலரையும் சேர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கச் செய்யவேண்டும். அதற்கு மேலும் பல கோடிகள் செலவாகும். குறைந்தது நூறு கோடியாவது செலவு செய்தால்தான் ஆட்சியைக் கவிழ்க்கமுடியும் என்கிற நிலைமை.

நவாஸ் ஷெரீஃப் அத்தனை செலவுக்கு பயந்துதான் பேசாமல் இருந்தார்.

இந்த விஷயத்தை யாரோ உத்தமோத்தமர் கர்ம சிரத்தையாகக் கொண்டுவந்து ஒசாமா பின்லேடன் காதுகளில் போட்டுவைத்தார்.

ஒசாமா யோசித்தார். பேனசிர் ஒரு பிரச்னை. பாகிஸ்தானில் இருக்கும் அல் காயிதாவின் பயிற்சி முகாம்களையெல்லாம் அவர் அழிக்கப் பார்க்கிறார். தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கிறார். தவிரவும் உளவுத்துறை எப்போதும் மோப்பம் பிடித்துக்கொண்டே வேறு இருக்கிறது. எல்லாவற்றுக்கும் பின்னணியில் அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் இருக்கிறது என்றபோதும், உள்ளூரில் இப்படி ஓர் ஆமாம்சாமி பிரதமர் இருப்பதுதானே ஆதிமூலக் காரணம்? பேனசிரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடுமல்லவா? புதிய பிரதமர் ஒருவேளை தமக்குச் சாதகமான நபராக இருக்கலாம். அல்லது தான் சொல்லக்கூடியதைக் கேட்கக்கூடியவராக, குறைந்தபட்சம் தனக்குத் தொந்தரவு தராதவராக இருக்கலாம். ஒரு முயற்சிதானே? செய்து பார்த்தால் என்ன?

இப்படி யோசித்துத்தான் பேனசிருக்கு எதிராக பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு செய்தார். கவனிக்கவும். இந்த ஏற்பாடு நவாஸ் ஷெரீஃபின் ஏற்பாடல்ல. முழுக்க முழுக்க ஒசாமாவின் ஏற்பாடு. ஆகவே, நவாஸ் கட்சி, பேனசிர் கட்சி, மற்ற சில உப்புமாக் கட்சிகள் எல்லாவற்றிலிருந்தும் கலந்து கட்டி எம்.பி.க்களை விலைக்கு வாங்கினார்கள். தலைக்கு இத்தனை என்று பேரம் பேசி அறுபது, அறுபத்தைந்து கோடி வரை செலவும் செய்தாகிவிட்டது. எல்லாம் நல்லபடியாக முடிந்தவுடன் மேற்கொண்டு ஊக்க போனஸ் கொடுத்து காரியத்தை முடித்துவிடலாம் என்பது ஏற்பாடு.

இந்த மாதிரி அரசியல் விவகாரங்களிலெல்லாம் ஒசாமாவுக்கு அனுபவம் கிடையாது. ஆகவே, ஆரம்பத்திலேயே ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் எச்சரித்தார். தெரியாத இடத்தில் மூக்கை நுழைக்காதே. ஆனால், ஏதாவது செய்து பேனசிரை வீட்டுக்கு அனுப்பினால்தான் பாகிஸ்தானில் அல் காயிதா இருக்கமுடியும் என்கிற நிலை. வேறு வழியில்லாமல், தனக்கே அத்தனை விருப்ப மில்லாமல்தான் ஒசாமா இந்த ஏற்பாட்டைச் செய்தார். இறுதியில் என்ன ஆயிற்று? ஒசாமா எத்தனை மோசமான அரசியல்வாதி என்பதும் பேனசிர் எப்பேர்ப்பட்ட பிறவி அரசியல்வாதி என்பதும், அதைக்காட்டிலும், பாகிஸ்தான் அரசியல்வாதிகள் எத்தனை உத்தமோத்தமர்கள் என்பதும் ஒரே நாளில் தெரிந்துபோனது.

இங்கே ஒசாமா பாயிடம் பெட்டி வாங்கிக்கொண்ட எம்.பி.க்கள் சமர்த்தாக பேனசிரிடம் போய் விஷயத்தைச் சொல்லி, உங்களால் எத்தனை தரமுடியும் என்று கேட்டார்கள். ஆ, நம்பிக்கைத் துரோகிகளே, தேசத் துரோகிகளே என்றெல்லாம் அலறாமல், வாங்கிய பெட்டிக்கு மேலே ஒரு சின்ன பர்ஸ் வைத்துத் திரும்பக் கொடுத்து பேனசிர் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜெயித்துவிட்டார்.

பின்லேடன் முகத்தில் ஈயாடவில்லை. தனக்கு அரசியல் எல்லாம் சரிப்பட்டுவராது என்று அவர் உணர்ந்த தருணம் அதுதான். என்ன, கொஞ்சம் அதிக விலை கொடுத்துக் கற்றுக்கொண்ட பாடம். பாதகமில்லை.

அதன்பிறகுதான் பேனசிரைக் கொன்றுவிடலாம் என்று முடிவு செய்தது. இந்த யோசனையை அளித்தது ஜவாஹிரி. அதற்கான இரண்டு முயற்சிகள்தான் தோல்வியைத் தழுவின. (இந்தக் கொலை முயற்சித் திட்டத்தையும் பேனசிரிடம் போட்டுக்கொடுத்தது, பெட்டி வாங்கிய எம்.பி.க்கள் சிலர்தான் என்று ஒரு வதந்தி உண்டு. ஊர்ஜிதமாகவில்லை.)

எப்படியோ, ஒசாமாவும் அல் காயிதாவும் பேனசிர் இருக்கும்வரை பாகிஸ்தானில் இருக்கமுடியாது என்றாகிவிட்டது. வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். உண்மையில் எதுவும் செய்யக்கூடியதாக இல்லை. ஆப்கனிஸ்தானில் இருக்கலாம்தான். ஆனால் வெறுமனே இருக்கத்தான் முடியுமே தவிர, வளர முடியாது. தவிரவும் இயக்கம் கொஞ்சம் பலம் பெறும்வரை அமெரிக்காவின் மறைமுகத் தொந்தரவுகள் எட்டிப்பார்க்க முடியாத பிரதேசம் எங்காவது போய்விடலாம் என்று ஒசாமா நினைத்தார்.

அப்போதுதான் சூடான் கூப்பிட்டது. கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் ஓர் ஏழை முஸ்லிம்

தேசம்.

1989-ம் ஆண்டிலிருந்து சூடானில் தேசிய இஸ்லாமிய முன்னணி என்ற கட்சி ஆட்சி செய்து வந்தது. அசன் அல் துராபி என்பவர் இந்தக் கட்சியின் தலைவர் அல்லது வழிகாட்டி அல்லது தளபதி அல்லது மதகுரு அல்லது பால் தாக்ரே.

அவர்களுக்கு அங்கே என்ன பிரச்னை என்றால் சூடானின் மைனாரிடிகளான கிறிஸ்துவர்களின் பிரதிநிதியாக, அரசுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்த ஒரு போராளி இயக்கம். சூடான் மக்கள் விடுதலை முன்னணி என்று அவர்களுக்குப் பேர்.

சூடான் அரசால், இந்த கிறிஸ்துவப் போராளிகளைச் சமாளிக்க முடியவில்லை. காரணம், ஒழுங்கான ராணுவம் கிடையாது. எல்லாம் அரை டிக்கெட்டுகள். பிளேடு பக்கிரிகளும் பிச்சுவா பிச்சுமணிகளும் ராணுவத்தில் இருந்தால் என்னாவது? ஆகவே, தமது ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி தர ஒரு வாத்தியாராக வரமுடியுமா என்று கேட்டு, ஒசாமா பின்லேடனை அணுகி னார் அசன் அல் துராபி. பதிலுக்கு சூடானில் அல் காயிதா ஒரு நிரந்தரமான தளம் அமைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ள பூரண ஒத்துழைப்புத் தருவதாகவும் சொன்னார்.

ஒசாமா சரி என்றார். அப்போதைக்கு அல் காயிதா பாதுகாப்பாக வளர அந்த ஏற்பாடு உதவும் என்று மட்டும்தான் அவருக்குத் தோன்றியது. உண்மையில் அல் காயிதாவுக்கு உலகின் இண்டு இடுக்கு விடாமல் எல்லா இடங்களிலும் வலுவான நெட் ஒர்க் அமையவும், கோடி கோடியாகப் பணம் வந்து குவியவும், பல்லாயிரக்கணக்கில் ஆள்பலம் சேர்க்கவும் சூடான்தான் சரியான அடித்தளம் அமைத்துக்கொடுக்கப் போகிறது என்று நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்!